# Arignar Anna Government Arts College
# Namakkal – 637 002

(Re-Accredited with 'B' Grade by NAAC & Affiliated to Periyar University, Salem)

## Drug Prevention Committee Report (2019-2022)



















# Drug Prevention Committee

Name of the Programmes:

| S. No. | Date | Programmes |
|---|---|---|
| 1. | 26.06.2019 | International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day - Awareness |
| 2. | 30.03.2022 | An Awareness on "Ban and Abuse of Drugs" |
| 3. | 25.06.2022 | International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day – Awareness |
| 4. | 11.08.2022 | Drug Prevention Awareness |
| 5. | 17.08.2022 | Substance Abuse Prevention & Mental Health Awareness |
| 6. | 05.09.2022 | Pathaiyai Martridum Pothai – (Drug Prevention Awareness) |
| 7. | 13.09.2022 | Tobacco Awareness Programme |
| 8. | 17.11.2022 | Drug Awareness Programme for College Professors |

| Drug Prevention Committee Members | |
|---|---|
| 1. | **Dr. E. G. Wesely Jebasing Devairakkam,** Associate Professor of Botany |
| 2. | **Dr. M. Chandrasekaran,** Assistant Professor of Botany |
| 3. | **Dr. N. Nagarathinam,** Assistant Professor of Zoology |

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day - Awareness** |
| Date of the Programme | : | 26.06.2019 |
| Time of the Programme | : | 10.30 am to 11.30 am |
| Venue | : | Arignar Anna Government Arts College Entrance, Namakkal – 637 002 |
| Chief Guest | : | **Mr. P. Sundarasolan**<br>Principal (i/c)<br>Arignar Anna Government Arts College<br>Namakkal – 637 002 |
| Total Number of Students/Staffs Participated | : | 50 |

On 26.06.2019, the Youth Red Cross organized a Drug Prevention Awareness Program, which aimed to educate and raise awareness among students about the harmful effects of drug addiction.

The program was presided over by **Mr. P. Sundarasolan,** Principal (i/c) of Arignar Anna Government Arts College, Namakkal.

The pledge taken by the students was a powerful way to conclude the program and emphasize the message of prevention and commitment to a healthy and drug-free lifestyle.

# International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day – Awareness (26.06.2019)



★★ – தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்க நகை போல அலங்கரிக்கப்படுகிறது –

தினத் தந்தி DAILY THANTHI

சேலம் (27-6-2019) வியாழக்கிழமை | மலர் 77 இதழ் 237 | வெல்க தமிழ் | விகாரி ஆனி மீ 12 உ ஹிஜிரி 1440 ஷவ்வால் 23

## போதை பொருட்கள் ஒழிப்புதின விழிப்புணர்வு ஊர்வலம்

### கல்லூரி மாணவ-மாணவிகள் பங்கேற்பு

நாமக்கல், ஜூன்.27-
சர்வதேச போதை பொருட்கள் ஒழிப்புதின விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. இதில் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

**விழிப்புணர்வு ஊர்வலம்**

நாமக்கல் மாவட்ட காவல் துறை சார்பில் சர்வதேச போதை பொருட்கள் ஒழிப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நாமக்கல்லில் நடந்தது. எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவு அருகில் இருந்து இந்த ஊர்வலத்தை மாவட்ட கலெக்டர் ஆசியா மரியம், போலீஸ் சூப்பிரண்டு அருளரசு ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர்.

இந்த ஊர்வலம் மணிக்கூண்டு, மோகனூர் சாலை, பி.எஸ்.என்.எல். அலுவலகம், டாக்டர் சங்கரன் சாலை, திருச்சி சாலை வழியாக சென்று நாமக்கல் பஸ் நிலையத்தில் நிறைவு பெற்றது. இதில் 250-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி சென்றனர்.

**துண்டு பிரசுரம் வினியோகம்**

மேலும் போதை பொருளுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியவாறு சென்றனர். வழிநெடுகிலும் போதை பொருட்கள் ஒழிப்பு குறித்த துண்டு பிரசுரங்கள் வினியோகம் செய்யப்பட்டன.

இதில் உதவி ஆணையர் (கலால்) இலாஹிஜான், ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் கண்ணன், இந்திய மருத்துவ சங்கத்தின் மாவட்ட தலைவர் ரெங்கநாதன் உள்பட அனைத்துத்துறை அலுவலர்கள், போலீசார் கலந்து கொண்டனர்.

மோகனூர் அருகே அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் இருந்து விழிப்புணர்வு ஊர்வலம் தொடங்கியபோது எடுத்த படம்.

**அரசு கல்லூரி**

இதேபோல் நாமக்கல்லில் இருந்து மோகனூர் செல்லும் சாலையில் உள்ள நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் (பொறுப்பு) சுந்தரசோழன் தலைமை தாங்கினார். இளைஞர் செஞ்சிலுவை சங்க தன்னார்வ தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் நாமக்கல்-மோகனூர் சாலையில் வாகன ஓட்டிகள், பஸ் டிரைவர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு போதை ஒழிப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வினியோகித்தனர்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் ராஜசேகர பாண்டியன் மற்றும் துறை தலைவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி செய்திருந்தார்.

## International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day – Awareness (26.06.2019)



காலைக்கதிர்

சேலம் | ஈரோடு | நாமக்கல் | கரூர்

வியாழன் ஜூன் 27 2019

# போதை ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாமக்கல், ஜூன் 27–

போதை ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி, நாமக்கல் அரசு கல்லூரியில் நடந்தது.

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் சார்பில், சர்வதேச போதை ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் [பொ] சுந்தரசோழன் தலைமை வகித்தார்.

செஞ்சிலுவை சங்க தன்னார்வ தொண்டர்கள், வாகன ஓட்டிகள், பஸ், லாரி மற்றும் இலகு ரக வாகன ஓட்டிகளுக்கு போதை பொருள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கி, அவற்றால் ஏற்படும் தீமை குறித்து விழிப்புணர்வு செய்தனர். பேராசிரியர்கள் ராஜசேகர பாண்டியன், சந்திரசேகரன், திட்ட அலுவலர் வெஸ்லி மற்றும் துறைத்தலைவர்கள் பங்கேற்றனர்.

# ARIGNAR ANNA GOVERNMENT ARTS COLLEGE
# NAMAKKAL – 637 002

(Re-Accredited with 'B' Grade by NAAC & Affiliated to Periyar University, Salem)

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **An Awareness on "Ban and Abuse of Drugs"** |
| Date of the Programme | : | 31.03.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Persons | : | **Mr. S. Suresh**<br>Deputy Superintendent of Police<br>Namakkal |
| | : | **Mr. S. Thangavel**<br>Inspector of Police<br>Mohanur |
| Theme fo the Programme | : | Abolition of Drug usage among students |
| Programme Outcome | : | Students enriched with drug prevention and got awareness about its side effects |
| Total Number of Students/Staffs Participated | : | 96 |

| | |
|---|---|
|  |  |
| Special Lecture on **"Ban and Abuse of Drugs" by Mr. S. Suresh,** Deputy Superintendent of Police, Namakkal | Pamlets distributed to public by **Mr. S. Thangavel,** Inspector of Police, Mohanur |

## An Awareness on "Ban and Abuse of Drugs" (31.03.2022)

**An Awareness on "Ban and Abuse of Drugs"** programme was organised by the Drug Prevention Committee of Arignar Anna Government Arts College in Namakkal held on 31st March, 2022.

**Dr. M. Chandrasekaran,** Assistant Professor of Botany & Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal to delivered the welcome address and to introduced the Resource Persons.

An informative and educational **"Awareness on Ban and Abuse of Drugs"** program was organized by the Drug Prevention Committee of Arignar Anna Government Arts College in Namakkal.

The program was presided over by the **Dr. S. Bangaru,** Principal (in charge) of the college.

During the program, **Mr. S. Suresh,** Deputy Superintendent of Police in Namakkal, delivered a lecture on the dangers of drug abuse, discussing various types of drugs that are commonly abused and their detrimental effects on the human body. He also highlighted the current laws and regulations surrounding drug abuse, emphasizing the severe penalties for violating them. The lecture was both insightful and informative, providing the attendees with a deeper understanding of the issue at hand.

**Mr. S. Thangavel,** Inspector of Police in Mohanur, also contributed to the program by distributing pamphlets that aimed to raise awareness about the dangers of drug abuse among the general public.

Ninety six students were benefited by the special lectures.

**Dr. E. G. Wesely,** Assistant Professor of Botany & Drug Prevention Committee Member,Arignar Anna Government Arts College, Namakkal delivered the vote of thanks at the end.

## An Awareness on "Ban and Abuse of Drugs" (31.03.2022)


தினமணி
வெள்ளிக்கிழமை
1 ஏப்ரல் 2022
தருமபுரி
16 பக்கங்கள் ரூ.9


# போதைப் பழக்கத்தால் கவனச் சிதறல் ஏற்படும்

## நாமக்கல் டிஎஸ்பி



போதைப் பொருள்கள் தடுப்பு விழிப்புணர்வு போட்டியில் வென்ற மாணவிக்கு பரிசு வழங்கும் நாமக்கல் துணை கண்காணிப்பாளர் எஸ்.சுரேஷ்.

**நாமக்கல், மார்ச் 31:** போதைப் பழக்கத்திற்கு அடிமையானால் மூளை பாதிக்கப்படுவதுடன், கல்வியில் கவனம் சிதறக்கூடும் என மாணவர்களிடம் நாமக்கல் துணை கண்காணிப்பாளர் எஸ்.சுரேஷ் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் போதைப் பொருள்கள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) பங்காரு தலைமை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் துணை கண்காணிப்பாளர் எஸ், சுரேஷ் கலந்து கொண்டு பேசியது:

நாமக்கல் மாவட்டம் தற்போது போதைப் பொருள்கள் இல்லாத மாவட்டமாக மாற்றமடைந்துள்ளது. போதைப் பொருள்கள் விற்பனை செய்வோர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர். மாணவ, மாணவிகள் போதைப் பொருள்களை பயன்படுத்தினால் மூளை பாதிப்பு ஏற்படுவதுடன், கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். மாணவர்கள் இந்த பருவத்தில் போதைக்கு அடிமையாகாமல் எதிர்கால வாழ்க்கையை நினைத்து உரிய இலக்கை நோக்கியே பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மோகனூர் காவல் ஆய்வாளர் தங்கவேல் மாணவர்களிடம் துண்டுப் பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவ, மாணவிகள் அனைவரும் போதைப் பொருளுக்கு எதிரான மனித சங்கிலியில் பங்கேற்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இதில், தாவரவியல் உதவிப் பேராசிரியர்கள் வெஸ்லி, சந்திரசேகரன், விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் நாகரத்தினம் ஆகியோர் செய்திருந்தனர்.

## An Awareness on "Ban and Abuse of Drugs" (31.03.2022)

காலைக்கதிர்
சேலம் | ஈரோடு | நாமக்கல் | கரூர்
வெள்ளி ஏப்ரல் 1 2022 ■ நாமக்கல் 14 பக்கம் | ரூ.7 | காலை 23 | கதிர் 106
வெள்ளி | 1.4.2022 காலைக்கதிர் 5 நாமக்கல்

நாமக்கல் அரசு கல்லூரியில்

# போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

**நாமக்கல், ஏப். 1–**

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் (பொ) பங்காரு தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் டி.எஸ்.பி., சுரேஷ் பங்கேற்று பேசியதாவது:

நாமக்கல் மாவட்டம் போதை பொருட்கள் இல்லாத மாவட்டமாக மாறி உள்ளது. போதை பொருட்கள் விற்பனை செய்வோர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர். மாணவ, மாணவிகள் போதை பொருள்களை பயன்படுத்தினால், மூளை பாதிப்பு ஏற்படுவதுடன், கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். மாணவர்கள் இந்த பருவத்தில் போதைக்கு அடிமையாகாமல், எதிர்கால வாழ்க்கையை நினைத்து, உரிய இலக்கை நோக்கியே பயணிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் விழிப்புணர்வு பிரசுரங்கள் மாணவர்களிடம் வழங்கப்பட்டது.

கல்லூரி மாணவ, மாணவியர் போதை பொருட்களுக்கு எதிரான மனித சங்கிலியில் பங்கேற்று, உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.



■ நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நடந்த போதைப் பொருள்கள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் டி.எஸ்.பி., சுரேஷ் பேசினார்.

## An Awareness on “Ban and Abuse of Drugs” (31.03.2022)


★ - சென்னை, சேலம், மதுரை, திருச்சி, கோவை, நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய், கொழும்பு நகரங்களில் அச்சாகிறது

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

சேலம் (1-4-2022)
வெள்ளிக்கிழமை
SALEM

மலர் 80
இதழ் 150
VOL 80
ISSUE 150

பிலவ ஆண்டு பங்குனி மீ 18 உ
ஹிஜ்ரி 1443 ஷ அபான் 28

சேலம் 1-4-2022 7


நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

### போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



மோகனூர், ஏப்.1-

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் போதைபொருள் தடுப்புகுழு மற்றும் நாமக்கல் மாவட்ட காவல் துறை சார்பில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) பங்காரு தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி நுழைவுவாயிலில் மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்களை வாகன ஓட்டிகள் மற்றும் பயணிகளுக்கு வினியோகித்து மனித சங்கிலி ஏற்படுத்தினர்.

சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்ட துணை போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ் கலந்து கொண்டு பேசுகையில், நாமக்கல் மாவட்டமானது தற்போது போதை பொருட்கள் இல்லாத மாவட்டமாக மாற்றம் பெற்று வருகிறது. போதை பொருட்கள் விற்பனை செய்பவர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தில் தண்டிக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். மாணவ, மாணவிகள் போதை பொருட்களை பயன்படுத்தினால் மூளை பாதிப்பு ஏற்பட்டு கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் போகும் சூழ்நிலை ஏற்படும்.

எனவே படிக்கும் காலத்தில் மாணவர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபடாமல் திட்டமிட்டு எதிர்கால வாழ்க்கையை எண்ணி இலக்கை நோக்கிய பயணம் மேற்கொள்ள வேண்டும் என பேசினார்.

போதை பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதையடுத்து மாணவ, மாணவிகள் போதை பொருள் தடுப்பு உறுதிமொழி எடுத்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை தாவரவியல் உதவி பேராசிரியர்கள் வெஸ்லி, சந்திரசேகரன் மற்றும் விலங்கியல் துறை உதவி பேராசிரியர் நாகரத்தினம் ஆகியோர் செய்திருந்தனர்.

# An Awareness on "Ban and Abuse of Drugs" (31.03.2022)

publ♙c

Drug Prevention Committee, Arignar Anna Government Arts College, Namakkal Organized **"Drug Awareness and Prevention Programme"** on 31.03.2022



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



மோகனூர்: நாமக்கல் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு

# ARIGNAR ANNA GOVERNMENT ARTS COLLEGE
# NAMAKKAL – 637 002

(Re-Accredited with 'B' Grade by NAAC & Affiliated to Periyar University, Salem)

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day - Awareness** |
| Date of the Programme | : | 25.06.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 11.30 am |
| Venue | : | Arignar Anna Government Arts College Entrance, Namakkal – 637 002 |
| Resource Persons | : | **Mrs. Selvi**<br>District Excise Assistant Commissioner<br>Namakkal |
| | : | Mr. **C. R. Rajesh Kannan**<br>District Secretary<br>Indian Red Cross Society<br>Namakkal |
| Total Number of Students/Staffs Participated | : | 50 |

| | |
|---|---|
|  |  |
| The campaign to eradicate drug addiction by forming a human chain by students and professors | Distributing leaflets to motorists by **Mrs. Selvi,** District Assistant Commissioner (Excise), Namakkal |

## International Day against Drug Abuse and Illicit Trafficking /World Drug Day – Awareness (25.06.2022)

On 25th June 2022, the Youth Red Cross, Eco Club, Internal Quality Assurance Cell, and Drug Prevention Committee of Arignar Anna Government Arts College, Namakkal and Indian Red Cross, Namakkal jointly organized an awareness program on the occasion of International Day against Drug Abuse and Illicit Trafficking, also known as World Drug Day.

The program was graced by the esteemed presence of **Mrs. Selvi,** District Assistant Commissioner (Excise), Namakkal, who presided over the event, and Mr**. C. R. Rajesh Kannan,** District Secretary, Indian Red Cross Society, Namakkal, who felicitated the program.

The event was attended by students, Heads of Departments, Professors, and Non-Teaching Officers, who actively participated in the campaign to eradicate drug addiction by forming a human chain and distributing leaflets to motorists, passengers, and pedestrians.

**Dr. M. Rajasekara Pandian,** Eco Club Coordinator, **Dr. E. G. Wesely,** YRC Programme Officer & Drug Prevention Committee Member, **Dr. M. Chandrasekaran,** IQAC Coordinator & Drug Prevention Committee Member, and **Dr. N. Nagarathinam,** NSS Programmers Officer & Drug Prevention Committee Member, organized the program and concluded the event by leading the students in taking a pledge to prevent drug addiction.

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **Drug Prevention Awareness** |
| Date of the Programme | : | 11.08.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Person | : | **Mr. S. Thangavel**<br>Inspector of Police<br>Mohanur |
| Theme fo the Programme | : | Abolition of Drug usage among students |
| Programme Outcome | : | Students enriched with drug prevention and got awareness about its side effects |
| Total Number of Students/Staffs Participated | : | 50 |




Special Lecture on **"Drug Prevention"** by **Mr. S. Thangavel,** Inspector of Police, Mohanur




The students and faculty members took a pledge to eradicate drugs



Distributing pamphlets to students by **Mr. S. Thangavel,** Inspector of Police, Mohanur

## Drug Prevention Awareness (11.08.2022)

**Drug Prevention Awareness** programme was organised by the Drug Prevention Committee of Arignar Anna Government Arts College in Namakkal held on 11th August, 2022.

**Dr. M. Chandrasekaran,** Assistant Professor of Botany & Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal to delivered the welcome address and to introduced the Resource Persons.

The program was presided over by the **Dr. P. Murugan,** Principal, Arignar Anna Government Arts College, Namakkal.

**Mr. S. Thangavel,** Inspector of Police in Mohanur, also contributed to the program by distributing pamphlets that aimed to raise awareness about the dangers of drug abuse among the students and concluded the event by leading the students in taking a pledge to prevent drug addiction. He discussed the various measures being taken by the Tamil Nadu government to combat drug use and emphasized the negative impact of drug use on students. Fifty students were benefited by the special lectures.

**Dr. E. G. Wesely,** Assistant Professor of Botany & Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal delivered the vote of thanks at the end.

## Drug Prevention Awareness (11.08.2022)

- சென்னை, சேலம், மதுரை, திருச்சி, கோவை, நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய், கொழும்பு நகரங்களில் அச்சாகிறது -

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

சேலம் (12-8-2022) வெள்ளிக்கிழமை SALEM | மலர் 80 இதழ் 283 VOL 80 ISSUE 283 | சுபகிருது ஸ்ரீ ஆடி மீ 27 உ ஹிஜிரி 1444 முகரம் 13

6 சேலம் 12-8-2022 ★★★

### நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கல்லூரியில்

# போதைப்பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

மோகனூர், ஆக.12-

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலை கல்லூரியில் போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக மோகனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கவேல் கலந்து கொண்டு, போதைப் பொருள்களுக்கு எதிராக தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும், போதைப் பொருள்கள் பயன்படுத்துவதால் மாணவ-மாணவிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் பேசினார். மேலும், ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் தங்களது உறவினர்கள், நண்பர்களில் ஒருவரையாவது போதை பழக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து மாணவ-மாணவிகளுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் போதை தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற தலைப்பில் போதை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி போதை பொருள் தடுப்பு குழு பேராசிரிய உறுப்பினர்கள் வெஸ்லி, நாகரத்தினம் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **Substance Abuse and Mental Health Awareness** |
| Date of the Programme | : | 17.08.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Person | : | **Dr. M. R. Suryaprakash,**<br>District Epidemiologist & District Covid 19 Coordinator,<br>O/o Deputy Director of Health Services, Salem |
| Theme fo the Programme | : | Abolition of Drug usage among students |
| Programme Outcome | : | Students enriched with drug prevention and got awareness about its side effects |
| Total Number of Students/Staffs Participated | : | 50 |

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)



ARIGNAR ANNA GOVERNMENT ARTS COLLEGE
NAMAKKAL – 637 002
(Re-Accredited with 'B' Grade by NAAC & Affiliated to Periyar University, Salem)

RED RIBBON CLUB

RED RIBBON CLUB

*Organizes*

**Substance Abuse Prevention & Mental Health Awareness**

போதைப் பொருள் தடுப்பு மற்றும் மனநல விழிப்புணர்வு

**Programme Schedule**

| | | |
|---|---|---|
| Date | : | 17th August, 2022 |
| Time | : | 11.00 am – 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Govt. Arts College, Namakkal |
| Welcome Address | : | **Dr. M. Chandrasekaran** M. Sc., M. Phil., Ph. D.<br>Assistant Professor of Botany & RRC Programme Officer<br>Arignar Anna Govt. Arts College, Namakkal |
| Presidential Address | : | **Dr. P. Murugan** M. A., M. Phil., Ph. D.<br>Principal<br>Arignar Anna Govt. Arts College, Namakkal |
| Resource Person | : | **Dr. M. R. Suriyaprakash** M.B.B.S., PGDHIVM., DCMH.<br>District Epidemiologist & District Covid 19 Coordinator,<br>O/o Deputy Director of Health Services, Salem |
| Vote of Thanks | : | **Dr. E. G. Wesely Jabasing Devairakkam** M. Sc., Ph. D.<br>Assistant Professor of Botany & YRC Programme Officer,<br>Arignar Anna Govt. Arts College, Namakkal |

*We request honor of your presence*

Faculty Members & RRC Volunteers
Arignar Anna Government Arts College, Namakkal

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

| | |
|---|---|
|  |  |
| Welcome Address by **Dr. M. Chandrasekaran**, RRC - Programme Officer, Arignar Anna Govt. Arts College, Namakkal | Presidential Address by **Dr. P. Murugan,** Principal, Arignar Anna Govt. Arts College, Namakkal |
|   |  |
| Special Lecture on **"Adolescent Friendly Talk on Health"** delivered by **Dr. M. R. Suriyaprakash,** District Epidemiologist & District Covid 19 Coordinator, O/o Deputy Director of Health Services, Salem | Student Participants |

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

Red Ribbon Club of Arignar Anna Government Arts College, Namakkal organized **Substance Abuse and Mental Health Awareness** on 17th August, 2022.

**Dr. M. Chandrasekaran,** Assistant Professor of Botany **&** RRC Programme Officer, and Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal and organizing secretary of the Awareness programme to delivered the welcome address and introduced the Resource Person.

The programme was presided over by **Dr. P. Murugan,** Principal, Arignar Anna Government Arts College, Namakkal.

**Dr. M. R. Suryaprakash**, District Epidemiologist & District Covid 19 Coordinator, O/o Deputy Director of Health Services, Salem, who attended and spoke, discussed various topics, including how students can live happily and maintains a good mood, the onset of drug addiction, its effects, and provided examples of how addicts can recover. Additionally, he offered mental counselling to the students.

One Hundred participants of our first year students were benefited by the special lectures.

**Dr. E. G. Wesely,** Assistant Professor of Botany & YRC Programmers Officer, and Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal delivered the vote of thanks at the end.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)



இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
சேலம் பதிப்பு • வியாழன், ஆகஸ்ட் 18, 2022
14 பக்கங்கள் ₹ 8

ஊர்வலம் | இந்து தமிழ் திசை | KOVAI | வியாழன், ஆகஸ்ட் 18, 2022 | 3

### நாமக்கல் அரசு கல்லூரியில் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி

**நாமக்கல்:** நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் செஞ்சுருள் சங்கம் சார்பில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பெ. முருகன் தலைமை வகித்தார். சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணர் மற்றும் மாவட்ட 'கோவிட் 19' ஒருங்கிணைப்பாளர் எம்.ஆர்.சூர்யபிரகாஷ் பேசினார். அப்போது மாணவ, மாணவியர் எவ்வாறு மகிழ்ச்சியோடு நல்ல மனநிலையோடு வாழலாம், போதைப் பழக்கவழக்கத்தின் தொடக்கம், அடிமையாவதன் விளைவுகள், அடிமையானவர்கள் எவ்வாறு அதில் இருந்து விடுதலை பெறுவது என்பது குறித்து விளக்கப்பட்டது.

மாணவ, மாணவியருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டன. செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர்கள் வெஸ்லி, சந்திரமோகன், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

- தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்க நகை போல அலங்கரிக்கப்படுகிறது -

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

சேலம் (18-8-2022) வியாழக்கிழமை SALEM
மலர் 80 இதழ் 289 VOL 80 ISSUE 289
சுபகிருது ஸ்ரீ ஆவணி மீ 2 உ ஹிஜ்ரி 1444 முகரம் 19

8 சேலம் 18-8-2022 ★★★ நாமக்கல் மாவட்ட செய்திகள்



நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

### போதை பொருள் தடுப்பு, மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி

மோகனூர், ஆக.18-
நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் சார்பில் போதை பொருள் தடுப்பு மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முருகன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணர் டாக்டர் சூர்யபிரகாஷ் கலந்து கொண்டு மாணவ மாணவிகள் எவ்வாறு மகிழ்ச்சியோடும், நல்ல மனநிலையோடு வாழலாம் என்பது குறித்தும், போதை பழக்கத்தின் தொடக்கம், அடிமையாவதின் விளைவுகள், அடிமையானவர்கள் எவ்வாறு விடுதலை பெறலாம் என்பது குறித்தும் பேசினார். மேலும் மாணவ, மாணவிகளுக்கு மனநல ஆலோசனைகளை வழங்கினார். இதில் செஞ்சுருவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், வணிகவியல், தாவரவியல் மற்றும் கணிதவியல் மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
● Salem ● Friday , 19-8-2022 ● Volume 41 Issue 198 ● 16 Pages ₹6

16 • Salem 19.8.2022 தினகரன் நாமக்கல்

நாமக்கல் அரசு கல்லூரியில்

# மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாமக்கல், ஆக.19: நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில், செஞ்சுருள் சங்கத்தின் சார்பில், போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக, சேலம் பொது சுகாதாரத்துறை தொற்றுநோயியல் நிபுணர் மற்றும் மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் சூர்யபிரகாஷ் கலந்துகொண்டு, மாணவ, மாணவியர் எவ்வாறு மகிழ்ச்சியோடு நல்ல மனநிலையோடு வாழலாம். போதைப் பழக்கவழக்கத்தின் துவக்கம், அடிமையாவதின் விளைவுகள் குறித்தும், அடிமையானவர்கள் எவ்வாறு விடுதலை பெறலாம் என்பதை குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், மாணவ, மாணவியருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், வணிகவியல், தாவரவியல் மற்றும் கணிதவியல் மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

காலைக்கதிர்
KAALAIKADHIR
சேலம் | ஈரோடு | நாமக்கல் | கரூர்
வியாழன் ஆகஸ்ட் 18 2022
நாமக்கல் NAMAKKAL 14 பக்கம் ₹ 7 | காலை 23 கதிர் 245 | VOL 23 ISSUE 245
4 காலைக்கதிர் வியாழன் | 18.8.2022 நாமக்கல்

### அரசு கலைக்கல்லூரியில் மனநல விழிப்புணர்வு

மோகனூர், ஆக. 18–

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில், செஞ்சுருள் சங்கம் சார்பில், போதை பொருட்கள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார்.

சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணரும், மாவட்ட கொரோனா தொற்று ஒருங்கிணைப்பாளருமான சூர்ய பிரகாஷ் பங்கேற்று பேசினார். அப்போது போதைக்கு அடிமையானவர்கள், எப்படி விடுதலை பெறலாம் என்பது குறித்து விளக் கினார். இதில், செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை, செஞ்சுருள் சங்க திட்ட அலு வலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

**InstaNewS**

Home / தமிழ்நாடு / நாமக்கல் / நாமக்கல்

### அரசு கல்லூரியில் போதைப் பொருள் தடுப்பு, மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி

**HIGHLIGHTS**

Mental Health Awareness Speech -நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி ரெட் ரிப்பன் கிளப் சார்பில் போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

By P.Nathan, Reporter
18 Aug 2022 7:45 AM




நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், சேலம் பொது சுகாதாரத்துறை டாக்டர் சூர்யபிரகாஷ் பேசினார். அருகில் கல்லூரி முதல்வர் முருகன்.

Mental Health Awareness Speech -நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி ரெட் ரிப்பன் கிளப் சார்பில் போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார். சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணர் மற்றும் மாவட்ட கோவிட் 19 ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சூர்யபிரகாஷ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசினார். அப்போது மாணவ, மாணவியர் எவ்வாறு மகிழ்ச்சியோடு நல்ல மனநிலையோடு வாழலாம்.

போதைப் பழக்கவழக்கத்தின் தொடக்கம். அடிமையாவதன் விளைவுகள், அடிமையானவர்கள் எவ்வாறு அதில் இருந்து விடுதலை பெறுவது என்பது குறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும் மாணவ, மாணவியருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டது. ரெட்கிராஸ் சங்கத் திட்ட அலுவலர்கள் வெஸ்லி, சந்திரமோகன், கல்லூரி பேராசிரியர்கள் உள்பட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

நாமக்கல் நகர் வலம்...

5.2K subscribers

நாமக்கல் நகர் வலம் செய்திகள் NNVSM N...

அரசு கலைக் கல்லூரியில் செஞ்சுருள் சங்கத்தின் சார்பில் போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி




நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் செஞ்சுருள் சங்கத்தின் சார்பில் போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பெ. முருகன் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணர் மற்றும் மாவட்ட கோவிட் 19 ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் M.R. சூர்யபிரகாஷ் அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில்.... மாணவ மாணவியர் எவ்வாறு மகிழ்ச்சியோடு நல்ல மனநிலையோடு வாழலாம் என்பதை குறித்தும், போதைப் பழக்கவழக்கத்தின் துவக்கம், அடிமையாவதின் விளைவுகள் குறித்தும், அடிமையானவர்கள் எவ்வாறு விடுதலை பெறலாம் என்பதை குறித்தும் உதாரணங்களோடு எடுத்துரைத்தார். மேலும் மாணவ மாணவியருக்கு மனநல ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் வெஸ்லி, கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், வணிகவியல், தாவரவியல் மற்றும் கணிதவியல் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

## Substance Abuse and Mental Health Awareness (17.08.2022)

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

### போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

By DIN | Published On : 18th August 2022 01:46 AM | Last Updated : 18th August 2022 01:46 AM | அ+ அ அ- |

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில், செஞ்சுருள் சங்கத்தின் சார்பில் போதைப் பொருள் மற்றும் மனநல விழிப்புணர்வு கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக சேலம் பொது சுகாதாரத்துறை தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் எம்.ஆர்.சூர்யபிரகாஷ் பங்கேற்றுப் பேசுகையில், மாணவ மாணவிகள் எவ்வாறு மகிழ்ச்சியோடு, நல்ல மனநிலையோடு வாழலாம் என்பது குறித்தும், போதைப் பழக்க வழக்கத்தின் நொடக்க நிலை, அடிமையாவதின் விளைவுகள், அடிமையானவர்கள் எவ்வாறு விடுதலை பெறலாம் என்பது குறித்தும் உதாரணங்களோடு எடுத்துரைத்தார். மேலும், மனநல ஆலோசனைகளையும் அவர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், வணிகவியல், தாவரவியல் மற்றும் கணிதவியல் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் செய்திருந்தார்.

| | | |
|---|---|---|
| **Pathaiyai Martridum Pothai** Name of the Programme | : | **Pathaiyai Martridum Pothai**<br>(Drug Prevention Awareness) |
| Date of the Programme | : | 05.09.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Person | : | **Mr. Sathiskumar**<br>Child Protection Unit<br>Namakkal |
| Theme fo the Programme | : | Abolition of Drug usage among students |
| Programme Outcome | : | Students enriched with drug prevention and got awareness about its side effects |
| Total Number of Students/Staffs Participated | : | 75 |

---

## Pathaiyai Martridum Pothai (Drug Prevention Awareness) – (05.09.2022)






Youth Red Cross, Drug Prevention Committee, Arignar Anna Government Arts College, Namakkal and Namakkal Child Protection Unit, District Social Welfare Department jointly organized **"Drug Prevention Awareness Programme"** (**Pathaiyai Martridum Pothai -** "பாதையை மாற்றிடும் போதை") on 05.09.2022.

The program was presided over by the **Dr. P. Murugan,** Principal, Arignar Anna Government Arts College, Namakkal.

**Mr. Sathiskumar,** Child Protection Unit, District Social Welfare Department, Namakkal delivered Special Lecture on **"Pathaiyai Martridum Pothai".** He discussed the harmful effects of smoking and drug use among students. Seventy five students were benefited by the special lectures.

# Drug Prevention Awareness (05.09.2022)


முயற்சியே வாழ்வு! RNI No. TNTAM/2011/43987 Under Postal REGD. No. TN/CCN/579/2015-2017 முயற்சியே உயர்வு! முயற்சியே வெற்றி!

உள்ளாட்சி முரசு — தமிழ் தினசரி

உள்ளாட்சியே இந்தியாவின் ஆத்மா!

www.ullatchimurasu.com
ullatchimurasu2@gmail.com

ULLATCHIMURASU

சென்னை பதிப்பு | ஆட்சி: 12 | முரசு: 250 | 06.09.2022 | செவ்வாய்க்கிழமை | பக்கம்-8 | 500 காசுகள்

CHENNAI EDITION | ISSUE: 12 | MURASU:250 | 06.09.2022 | TUESDAY | PAGE - 8 | 500 PAISE


## அறிஞர் அண்ணா கல்லூரியில் விழிப்புணர்வு கருந்தரங்கம்

**நாமக்கல், செப்.06-**

நாமக்கல் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது. நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் நாமக்கல் மாவட்ட சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் "பாதையை மாற்றிடும் போதை" என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் பெர. முருகன் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார் பங்கேற்றார். இதில் ஏராளமான மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளைஞர் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் வெஸ்லி செய்திருந்தார்.

# Drug Prevention Awareness (05.09.2022)

InstaNewS

Home / தமிழ்நாடு / நாமக்கல் / நாமக்கல்

## அறிஞர் அண்ணா அரசு கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

**HIGHLIGHTS**

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பாதையை மாற்றிடும் போதை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

By P.Nathan, Reporter
6 Sept 2022 8:00 AM




நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார் பேசினார்.

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி ஜேஆர்சி மற்றும் நாமக்கல் மாவட்ட சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் பாதையை மாற்றிடும் போதை என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார் சிறப்பு விருப்பினராக கலந்துகொண்டு, புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், வாழ்க்கை ஒரு விலைமதிப்பற்ற பரிசு, அதை போதைப்பொருள்களில் வீணாக்காதீர்கள் என மாணவ மாணவிகளை வலியுறுத்தி பேசினார்.

கல்லூரி போதைப்பொருள் தடுப்புக் குழு உறுப்பினர் சந்திரசேகரன், ஜேஆர்சி திட்ட அலுவலர் வெஸ்லி மற்றும் திரளான பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# Drug Prevention Awareness (05.09.2022)



இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
சேலம் பதிப்பு • செவ்வாய், செப்டம்பர் 6, 2022
https://www.hindutamil.in
14 பக்கங்கள் ₹ 8
ரா, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி

செவ்வாய், செப்டம்பர் 6, 2022 KOVAI 3 ஊர்வலம்

**நாமக்கல் அரசு கலைக் கல்லூரியில் போதை தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி**

**நாமக்கல்:** நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் மாவட்ட சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் பாதையை மாற்றிடும் போதை என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமை வகித்தார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார் பங்கேற்று புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கிப் பேசினார். கல்லூரி போதைப்பொருள் தடுப்புக் குழு உறுப்பினர் சந்திரசேகரன், இளைஞர் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் வெஸ்லி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
KAALAIKADHIR
சேலம் | ஈரோடு | நாமக்கல் | கரூர்
செவ்வாய் செப்டம்பர் 6 2022
நாமக்கல் NAMAKKAL 14 பக்கம் ₹ 7 | காலை 23 கதிர் 264 | VOL 23 ISSUE 264

**அரசு கல்லூரியில் பயிற்சி பட்டறை**

**மோகனூர், செப். 6–**

நாமக்கல் அரசு கலைக்கல்லூரியில், இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் மாவட்ட சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், 'பாதையை மாற்றிடும் போதை' என்ற தலைப்பில், பயிற்சி பட்டறை நடந்தது. கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ் குமார் பங்கேற்று, 'பாதையை மாற்றிடும் போதை' என்ற தலைப்பில் பேசினார். அப்போது, 'புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் போதைப் பொருள்கள் பயன்படுத்துவதால், விலைமதிப்பற்ற வாழ்க்கையை இழக்க நேரிடும், என்று அறிவுறுத்தினார். பயிற்சி பட்டறையில், கல்லூரி போதைப்பொருள் தடுப்புக் குழு உறுப்பினர் சந்திரசேகரன், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை இளைஞர் செஞ்சிலுவை சங்கத்திட்ட அலுவலர் வெஸ்லி செய்திருந்தார்.

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **Tobacco Awareness Programme** |
| Date of the Programme | : | 13.09.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Person | : | **Dr. Lalitha**<br>District Tobacco Control Cell<br>Namakkal |
| Total Number of Students/Staffs Participated | : | 70 |






# Tobacco Awareness Programme (13.09.2022)

Drug Prevention Committee of Arignar Anna Government Arts College, Namakkal and Namakkal District Tobacco Control Unit jointly organized **Tobacco Awareness Programme** on 13.09.2022.

**Dr. M. Chandrasekaran,** Assistant Professor of Botany **&** RRC Programme Officer, and Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal and organizing secretary of the Awareness programme to delivered the welcome address and introduced the Resource Person.

The program was presided over by the **Dr. P. Murugan,** Principal, Arignar Anna Government Arts College, Namakkal.

**Dr. Lalitha,** Namakkal District Tobacco Control Medical Officer was a special guest at the program, and her speech on the harmful effects of tobacco use was insightful and informative. She spoke about how tobacco is the primary cause of cancer in the country, and how the substance nicotine, which is present in tobacco products, can have detrimental effects on the brain and the body. She also explain how tobacco use can affect various parts of the body, such as the lungs, and cause numerous health problems from head to toe. She emphasized that the harm caused by tobacco use is not limited to the user alone, but also affects those around them.

The program included a pledge to end tobacco use, which was taken by all participants.

**Dr. E. G. Wesely,** Assistant Professor of Botany & YRC Programmers Officer, and Drug Prevention Committee Member, Arignar Anna Government Arts College, Namakkal delivered the vote of thanks at the end.

## Tobacco Awareness Programme (13.09.2022)


- தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது -

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

சேலம் (14-9-2022) புதன்கிழமை SALEM | மலர் 80 இதழ் 316 VOL 80 ISSUE 316 | சுபகிருது ஸ்ரீ ஆவணி மீ 29 உ ஹிஜ்ரி 1444 சபர் 17

8 சேலம் 14-9-2022 ★★★


நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில்

### புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




மோகனூர், செப்.14-

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில், நாமக்கல் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையத்தின் சார்பில், புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் உள்ள கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலர் லலிதா கலந்து கொண்டு புகையிலை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், நாட்டில் கேன்சர் நோய் அதிகரித்து வருவதற்கு புகையிலை முக்கிய காரணம் என்றும், இதில் உள்ள நிக்கோட்டின் என்ற பொருள் பல்வேறு பாதிப்புகளை மூளையில் ஏற்படுகிறது என்றும், நுரையீரல் போன்ற பகுதிகள் பாதிக்கப்பட்டு தலை முதல் கால் வரை பல்வேறு உபாதைகள் ஏற்படுத்துவதாகவும் கூறினார். புகையிலை பயன்படுத்துவோர் மட்டுமின்றி அருகாமையில் உள்ளவர்களும் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். தொடர்ந்து புகையிலை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி இளைஞர் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

## Tobacco Awareness Programme (13.09.2022)



ஒரு புதிய அனுபவம்

தினகரன்

Dinakaran

www.dinakaran.com
/dinakarannews

● Salem ● Thursday, 15-9-2022 ● Volume 41 Issue 225 ● 16 Pages ₹6

16 • Salem 15.9.2022 தினகரன் நாமக்கல்

### புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம்

நாமக்கல், செப்.15: நாமக்கல் அரசு கல்லூரியில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்றது.

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில், மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையத்தின் சார்பில், புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முருகன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலர் லலிதா கலந்து கொண்டு புகையிலை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விளக்கி பேசினார். பீடி, சிகரெட் புகைக்கும்போது, அதனை பயன்படுத்துவோர் மட்டுமின்றி அருகாமையில் உள்ளவர்களும் அதிகம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். தொடர்ந்து புகையிலை ஒழிப்பு உறுதி மொழியை அவர் வாசிக்க கல்லூரி மாணவ, மாணவியர் திரும்ப கூறி ஏற்று கொண்டனர். நிகழ்ச்சியில், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி, செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## Tobacco Awareness Programme (13.09.2022)



இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

• சேலம் பதிப்பு • புதன், செப்டம்பர் 14, 2022

R Dis No 521/18 Vol.5 No.255

ர, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி

https://www.hindutamil.in • 14 பக்கங்கள் ₹ 8

ஊர்வலம் புதன், செப்டம்பர் 14, 2022 KOVAI 3

**நாமக்கல் அரசு கலைக் கல்லூரியில் புகையிலை ஒழிப்பு கருத்தரங்கு**

**நாமக்கல்:** நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் சார்பில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமை வகித்தார். மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலர் லலிதா பேசும்போது, "புகையிலைப் பொருட்களை பயன்படுத்துவதால் கேன்சர் நோய் அதிகரித்து வருகிறது. இதில் உள்ள நிக்கோடின் பல்வேறு பாதிப்புகளை மூளையில் ஏற்படுத்துகிறது. நுரையீரல் போன்ற பகுதிகள் பாதிக்கப்பட்டு தலை முதல் கால் வரை பல்வேறு உபாதைகள் ஏற்படுகிறது. புகையிலை பயன்படுத்துவோர் மட்டுமின்றி அருகாமையில் உள்ளவர்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்" என்றார். முன்னதாக புகையிலை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

கல்லூரி இளைஞர் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் வெஸ்லி, செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர் சந்திரசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# Tobacco Awareness Programme (13.09.2022)



காலைக்கதிர்
KAALAIKADHIR
சேலம் | ஈரோடு | நாமக்கல் | கரூர்
புதன் செப்டம்பர் 14 2022
நாமக்கல் NAMAKKAL 14 பக்கம் ₹ 7 | காலை 23 கதிர் 272 | VOL 23 ISSUE 272

4 காலைக்கதிர் புதன் | 14.9.2022 நாமக்கல்

## அறிஞர் அண்ணா கல்லூரியில் புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு

நாமக்கல், செப். 14-

மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம் சார்பில், புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு, நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் நடந்தது.

கல்லூரி முதல்வர் முருகன் தலைமை வகித்தார். நாமக்கல் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மருத்துவ அலுவலர் லலிதா, புகையிலை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், நாட்டில் கேன்சர் நோய் அதிகரித்து வருவதற்கு புகையிலையும் முக்கிய காரணம் என்றும், அதில் உள்ள நிக்கோட்டின் என்ற பொருள், பல்வேறு பாதிப்புகளை மூளையில் ஏற்படுத்துகிறது என்றும், நுரையீரல் போன்ற பகுதிகள் பாதிக்கப்பட்டு, தலை முதல் கால் வரை, பல்வேறு உபாதைகள் ஏற்படுத்துவதை விளக்கினார்.

கல்லூரி துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை இளைஞர் செஞ்சிலுவை சங்கத் திட்ட அலுவலர் வெஸ்லி, செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர் சந்திரசேகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

| | | |
|---|---|---|
| Name of the Programme | : | **Drug Awareness Programme for College Professors** |
| Date of the Programme | : | 17.11.2022 |
| Time of the Programme | : | 10.30 am to 1.00 pm |
| Venue | : | Seminar Hall, Arignar Anna Government Arts College, Namakkal |
| Resource Person/Chief Guests | : | **Tmt. Shreya P Singh**<br>District Collector<br>Namakkal |
| | : | **Mr. E Sair Charan Tejaswi**<br>Superintendent of Police<br>Namakkal |
| | : | **Mr. Sathiskumar**<br>Child Protection Unit<br>District Social Welfare Department<br>Namakkal |
| Total Number of Students/Staffs Participated | : | 100 |







Child Protection Unit, District Social Welfare Department, Namakkal organized Drug Awareness Programme for College Professors on 17.11.2022. In this awareness events **Tmt. Shreya P Singh,** District Collector, Namakkal, **Mr. E Sair Charan Tejaswi,** Superintendent of Police, Namakkal and **Mr. Sathiskumar,** Child Protection Unit, District Social Welfare Department, Namakkal were participated.

## Drug Awareness Programme for College Professors (17.11.2022)


சிகரத்தின் தினத்தென்றல் கிங் நாமக்கல் 24x7 வெள்ளிக்கிழமை 18.11.2022 10


### நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கல்லூரியில் பேராசிரியர்களுக்கான பயிற்சி முகாம்

**மாவட்ட ஆட்சியர், எஸ்.பி. பங்கேற்பு**








**நாமக்கல், நவ.18:** நாமக்கல் மாவட்ட நிர்வாகம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் பாதையை மாற்றிடும் போதை என்ற தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சி துவக்க விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரி முதல்வர் மா.குமரவேலு வரவேற்றார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய்சரண் தேஜஸ்வி தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்ரேயா பி சிங் முன்னிலை வகித்தார். கல்லூரி மட்டுமல்லாது பொது இடங் களிலும் போதை மருந்து தடுப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போதை தடுப்பு மற்றும் விதிமுறைகள் குறித்த பேனரை மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி சிங், மாவட்ட எஸ்.பி சாய்சரண் தேஜஸ்வி ஆகியோர் வெளியிட்டனர்.

விழாவில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார் திட்ட விளக்க உரையாற்றினார். இறுதியாக கல்லூரி தாவரவியல் உதவி பேராசிரியர் எ.ஞா. வெஸ்லி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.